உ

சிவமயம்



யாழ்/நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட

**உயர்திரு சின்னக்குட்டி சண்முகராஜா** அவர்கள்

இறைபதமடைந்தமை குறித்த

# நினைவு மலர்



*In Memory of ever loving*


***Mr. Cinnakutty Chanmugarajah***

*(Inland Revenue Officer)*

*Nainai - Jaffna - Sri Lanka*

***29. 03. 2002***

# அமரர் திரு. சின்னக்குட்டி சண்முகராஜா
# Mr. Cinnakutty Chanmugarajah



தோற்றம்
08.03.1921

மறைவு
29.03.2002

## திதி வெண்பா

ஆண்டு விஷு வருடம் அமைந்த பங்குனியில்
பூண்ட அபரபக்கப் பிரதமையில் - மாண்பு
சின்னக்குட்டி மைந்தன் சீரோன் சண்முகராஜா
இன்னுடலம் நீத்தார் காண்.



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

மந்திரவாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமைபங்கன் திருவாலவாயான் திருநீறே.

கருவாய்க் கிடந்துன் கழலேநினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன் னாமம் பயின்றே னுனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதிநீ பாதிரிப்புலி யூரரனே.

கூற்றாயினவாறு விலக்ககிலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிடர்
ஆற்றேனடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவ பெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

அவனை ஒளிய அமரரும் இல்லை
அவன் அன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவன் அன்றி மூவரால் ஆவதொன்றில்லை
அவன் அன்றி ஊர்புகுமாறு அறியேனே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

தண்டை அணி வெண்டையங் கிண்கிணி சதங்கையும்
தண்கழல் சிலம்புடன் கொஞ்சவே நின்
தந்தையினை முன்பிரிந்து இன்பவுரி கொண்டு நான்
சந்தொடம் அணைத்து நின்று அன்பு போலக்
கண்டு உற கடம்புடன் சந்த மகுடங்களும்
கஞ்சமலர் செங்கையும் சிந்துவேலும்
கண்களும் முகங்களும் சந்திர நிறங்களும்
கண்குளிர என்றன்முன் சந்தியாவோ?
புண்டரிகர் அண்டமும் கொண்டபகிர் அண்டமும்
பொங்கியெழ வெங்களம் கொண்டபோது
பொன்கிரி யெனச்சிறந்து எங்கினும் வளர்ந்துமுன்
புண்டரிகர் தந்தையும் சிந்தைகூரக்
கொண்ட நடனம் பதம் செந்திலிலும் என்றன் முன்
கொஞ்சி நடனம் கொளும் கந்தவேளே
கொங்கை குறமங்கையின் சந்தமணம் உண்டிடும்
கும்பமுனி கும்பிடும் தம்பிரானே!

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

ஓம் சரவண பவ

# கந்தர் சஷ்டி கவசம்



காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலர்அருள் கந்தர்
சஷ்டி கவசந்தனை

**குறள் வெண்பா**

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

நூல்

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மையல் நடஞ் செய்யும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்க வென்று வந்து
வர வர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம

நிபவ சரவண நிற நிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடி கெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியுங்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற்றேன் முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி ஒவ்வும்
குண்டலியாஞ் சிவ குகன் தினம் வருக
ஆறுமுகமும் அணி முடியாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடையழகும் இணை முழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ

மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்(து) உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா விநோதன் என்(று)
உன்திருவடியை உறுதியென்றெண்ணும்
என் தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதி செவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில் வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணை வேல் காக்க
முன்கை இரண்டும் முரண் வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க

எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனைய வேல் காக்க
ஏமத்தில் ஜாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கி சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்ம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங்காரமும் மிகு பல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை அடியினில் அரும் பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பல கலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதர்கள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்

கட்டுடனங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கள்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைதாள் சிலந்தி
பற்குத்து அரணை பரு அரையாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திருநாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுரபவனே திக ழொளி பவனே
பரிபுர பவனே பவம் ஒழிபவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துக் தேவர்கள் கடுஞ் சிறைவிடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடுப்பனை அழித்த, இனிய வேல்முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர் காமத்துறை கதிர்வேல் முருகா

பழனிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வராயா
சமராபுரி வாழ் சண்முகத்தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேனாடினேன் ஆவிநன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என் மீதுன் மனமகிழ்ந்தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட அருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறு உருக்கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அட்டதிக்குள்ளோர் அடங்கலும் வசமாய்த்

திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலான் கவசத்தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற்காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப் பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வசத்துரு சங்காரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத்மாவைத் துணித்தகையதனால்
இருபத்தேழ்வர்க் குவந்த முதளித்த
குருபரன் பழனிக் குன்றினில் இருக்கும்
சின்னக்குழந்தை சேவடி போற்றி
என்னைத் தடுத்தாட் கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோரரசே
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்



# ஆரத்தி

ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி - ஓம்ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா - ஓம் ஸ்ரீஜெய ஜெய ஜெய சக்தி

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் அடைய - அம்மம்மா தேவையெல்லாம் மறைய
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை - ஓம் ஸ்ரீஜெய ஜெய ஜெய சக்தி

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வரமருள்வாய் - அம்மம்மா ஈஸ்வரி வரமருள்வாய்
கரங்குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் - ஓம் ஸ்ரீஜெய ஜெய ஜெய சக்தி

காசினியெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்புருள்வாய் -அம்மம்மா கருத்தினில் அன்புருள்வாய்
தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவியுன் அடைக்கலமே - ஓம் ஸ்ரீஜெய ஜெய ஜெய சக்தி

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து ஞான - நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா - ஓம் ஸ்ரீஜெய ஜெய ஜெய சக்தி



# கற்பகவல்லி

கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதி அருள்வாயம்மா - தேவி (கற்பக)

பற்பலரும் போற்றும் பதிமயிலாபுரியில்
சிற்பம் நிறைந்த உயர் சிங்காரக் கோயில் கொண்ட
(கற்பக)

நீயிந்த வேளை தனில் சேயன் எனை மறந்தால்
நானிந்த நானிலத்தில் நாடுதல் யாரிடமோ
ஏனிந்த மௌனமம்மா ஏழை எனக்கிரங்க
ஆனந்த பைரவியே ஆதரித்தாளும் அம்மா
(கற்பக)

எல்லோர்க்கும் இன்பங்கள் எழிலாய் இறைஞ்சி என்றும்
நல்லாக்கி வைத்திடும் நாயகியே நித்ய
கல்யாணியே கபாலி காதல் புரியும் அந்த
உல்லாசியே உமா உனை நம்பினேன் அம்மா
(கற்பக)

நாகேஸ்வரி நீயே நம்பிடும் எனைக்காப்பாய்
வாகேஸ்வரிமாயே வாராய் இது தருணம்
பாகே சிறீதாயே பார்வதியே இந்த
லோகேஸ்வரி நீயே உலகில் நீ துணையம்மா
(கற்பக)

அஞ்சனமையிடும் அம்பிகே எம்பிரான்
கொஞ்சிக் குலாவிடும் வஞ்சியே நின்னிடம்
தஞ்சம் என அடைந்தேன் தாயே உன் சேய்நான்
ரஞ்சனியே ரட்சிப்பாய் கெஞ்சுகிறேன் அம்மா
(கற்பக)

- வீரமணி ஐயர், யாழ்ப்பாணம்

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.

எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.

எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாக நடக்கும்.

உன்னுடையதை எதை இழந்தாய்.

எதற்காக நீ அழுகிறாய்.

எதை நீ கொண்டு வந்தாய்.

அதை நீ இழப்பதற்கு.

எதை நீ படைத்திருந்தாய் அது வீணாவதற்கு

எதை நீ எடுத்துக் கொண்டாயோ

அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.

எதைக் கொடுத்தாயோ

அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ

அது நாளை மற்றொருவருடையதாகிறது

இதுவே உலக நியதியும் எனது படிப்பின் சாரம்சமுமாகும்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணா



## வாழ்க்கை வரலாறு

நீருற வளைந்து புரண்டெழுந்திரைந்து நிறைந்திடும் பணத்திரை
விரித்துக்
காருறவிடவி கொண்டுல கெலா மீன்ற கருணைநாயகி
திருக்கோலத்
தேருற விளங்கு முரக மொத்திருந்த விருங்கடனவுணன்
எண்டிசையும்
பாருடன் புகழத் திகழ்சிகாமணிபோற் படிந்த நன்
நயினையம் பதியே

யாழ்ப்பாணக்குடாநாட்டிலே காரைதீவு, எழுவைதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, நயினாதீவு, லைடன்தீவு, நெடுந்தீவு ஆகிய சப்த தீவுகளுக்கு நடு நாயகமாக அமைந்துள்ளதும் சிலப்பதிகாரத்தில் முக்கிய அங்கம் வகித்து சரித்திரப் புகழ் வாய்ந்ததுமான நயினாதீவிலே சைவ வேளாள குலத்திலே சின்னக்குட்டிக்கும் சிவபாக்கியத்திற்கும் அருந்தவப் புதல்வனாகத் திரு சண்முகராஜா அவதரித்தார். இவரின் பெற்றோர்கள் நயினாதீவு நாகராஜேஸ்வரி அம்மனிடம் மிகுந்த ஈடுபாடு இருந்தபோதிலும் பரம்பரை பரம்பரை யாக வியாபாரத் தொழிலிலே பாண்டித்தியம் பெற்றிருந்தபோதும் "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்ற முது மொழிக்கிணங்க இவருக்குக் கல்வி புகட்ட வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் கொட்டடி யாழ்ப்பாணத்தில் வந்து குடியேறினார். இவர் தனது கல்வியை யாழ் மத்திய கல்லூரியில் ஆரம்பித்து சிறந்த மாணவனாகவும் பெற்றோருக்கு ஒழுக்கமுள்ள பிள்ளையாகவும் அன்பான சகோதரராகவும் வாழ்ந்து வந்தார். இவரின் தமக்கை நாகரத்தினத்தை ஒரு அன்னையைப்போல் அன்பு காட்டியதுடன் தம்பிமார் இரத்தினசபாபதி நடராஜாவை இருகண்களைப் போல பாதுகாத்தார். பரீட்சைகளில் தேறி எழுது வினைஞனாக அரசாங்கத்தில் அடியெடுத்து வைத்து இறுதியில் இறைவரித் திணைக்களத்தில் பெரும் பதவி வகித்தார். இவர் செய்யும் தொழிலே தெய்வம் என கடமை கண்ணியம்

கட்டுப்பாட்டுடன் உழைத்தது மட்டுமல்லாமல் சமையற்கலை, தையற் கலை சித்திரம் பயிர்ச் செய்கை போன்றவற்றிலும் சிறந்த விளங்கியதைக் கண்டறிந்தவரும் இவரின் தந்தை சின்னக் குட்டியுடன் வியாபாரத்தில் பங்குதாராகவும் இருந்த திரு மார்க்கண்டு இவரைத் தனது மகள் சிவபாக்கியத்திற்குக் கடிமணம் செய்ய ஆசைப்பட்டு சின்னக்குட்டியிடம் கேட்டபோது தந்தையின் சொல்லைத்தட்டாது சிவபாக்கியத்தைக் கைப்பிடித்து சிறந்த குடும்பஸ்தராக இனிய வாழ்க்கை நடத்தியதன் பலனாகப் பிறந்த மகனுக்குச் சூரிய உச்சம் காரணமாக உதயகுமார் என்று நாமஞ் சூட்டி மகிழ்ந்தார். அதன்பின் கதிர்காமத்தில் ஒரு பெண்குழந்தை தெய்வயானை அம்மன் கோவிலுக்கு முன்னால் நின்று நடமாடியதைப் பார்த்துத் தனக்கும் ஒரு பெண்குழந்தை கிடைக்காதா என ஆசைப்பட்டார். இரண்டாவதாக ஒரு பெண் குழந்தை பிறந்தாள். அவளுக்குத் தெய்வயானை எனப் பெயர் சூட்டினால் நாகரிக உலகத்திற்கு இது பொருந்துமா எனச் சிந்தித்து தெய்வகலா எனப் பெயரிட்டு அருமை பெருமையாக வளர்த்து வந்தார். இதன்பின் செந்தமிழ்ச் செல்வி இளவரசி என்ற இனிய நாமங்களை இளைய புதல்விகளுக்குத் தேர்ந்தெடுத்து வைத்தார்.

தமிழில் மிகுந்த பற்றுக் கொண்ட இவர் அழகான தமிழ்ப் பெயர்களைப் பிள்ளைகட்கு வைத்துள்ளார் என அனைவரும் வியந்தனர். அதுமட்டுமல்ல வார விடுமுறைக்கு யாழ் செல்லும் போது புகையிரதம் வவுனியாவை அடைந்ததும் ஆங்கிலேய ஆடைகளைக் களைந்துவிட்டு வேட்டி சால்வைகளை அணிந்து கொள்வது இவரின் தமிழ்க்கலாச்சாரத்தில் இருந்த நாட்டத்தைப் பிரதிபலித்துள்ளது. இவரின் மீது பாசங் கொண்ட தம்பி இரத்தின சபாபதி தனது புதல்வர்களுக்கு சிவகுமார், ஆனந்தக்குமார் எனப் பெயரிட்டதுடன் இளையவர் நடராசா தனது புதல்விகளுக்கு மங்களச் செல்வி, அன்பரசி என்ற ஒற்றுமைப்பாடுடைய பெயர்

களைச் சூட்டியதும் இவர்களின் குடும்ப ஒற்றுமையையும் தமிழ்ப் பற்றையும் எடுத்துக் காட்டுகிறது. இவர் அரசாங்க சேவையுடன் மட்டும் நின்றுவிடாது சினிமா வியாபார ஸ்தாபனங்கட்கும் இறைவரி அலுவலராகக் தொழிலாற்றிப் பிள்ளைகளை நன்றே வளர்த்து ஆளாக்கினார். இவரின் மூத்த புதல்வன் உதயகுமார் வடலியடைப்பைச் சேர்ந்த ஆசிரிய தம்பதிகளின் புதல்வி அரியமலர் (Pharmacist) ஐக் கடிமணம் புரிந்ததன் பலனாகச் சக்தி என்னும் பேரப்பிள்ளையையும், தெய்வகலா, கரம்பனைச் சேர்ந்த இமானுவலைக்(Marine Engineer) கைப்பிடித்ததால் வேல்விழி எனும் பேரப்பிள்ளையையும் தெய்வகலா மாணிக்கவாசகரை (MSc) மணந்ததன் பயனாக ரேவதி, வனிதா, உஷா ஆகிய பேரப்பிள்ளை களும், புங்குடுதீவைச் சேர்ந்த தொழிலதிபரும் திருப்பதி ஸ்ரோஸ் உரிமையாளருமான முத்துலிங்கத்தைத் தனது மகள் செந்தமிழ் செல்விக்கு மணமுடித்து வைத்ததன் பலனாக அமிர்தவர்ஷினி, பிலோஜனி, பிரசன்னா என்ற பேரப்பிள்ளை களையும் இளையமகள் ராஜ்குமாரை மணந்ததனால் ஆதவன், சுபிதா, ரஜிதா என்ற பேரப்பிள்ளைகளையம் பெற்று மகிழ்ந்தார். வேல்விழி என்ற பேரப்பிள்ளையைத் தனது பேரப்பிள்ளையாக எண்ணாது தனது ஐந்தாவது பிள்ளையாக கல்வியூட்டி அன்பு காட்டி வளர்த்தார். இவருக்குச் சிறந்த நண்பர் திரு சிவகுணம் ஆவார். மரணபயம் தன்னைத் தீண்டாதிருக்க இறுதிக்காலத்தில் கந்தஷஷ்டி கவசத்தைப் பாடிய வண்ணம் இருந்த பலனாக முருகன் தனது நாளாகிய வெள்ளியில் ஆழ்ந்த உறக்கத்தில் மரணபயம் தெரியாது அரவணைத்துக் கொண்டான்.

இவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி நயினைத் தாயைப் பிரார்த்திப்போமாக

## மனைவி புலம்பல்

அருந்தவப் பலனாக அணைக்க வந்த கரம்பற்றி
ஒருத்தரையும் வதைக்காது உன்னதமாய் வாழவைத்து
திருவும் செல்வமும் சீருந் தழைக்க வைத்து
அருமையுடன் எனைக் காத்த ஐயாவே நீர் எங்கே?


வருத்தமோ சிறிதென்று வாடாமல் இருந்து விட்டேன்
பெருத்த காலன் வந்த பெருங்கதையை யாரறிவார்
ஒருதருக்கும் உண்மைநிலை தெரியாமல்
சிரத்தையின்றி மாண்டீரோ? செய்வது அறியேனே!

## மக்கள் புலம்பல்

ஐயா நீர் எம்மையெல்லாம் அன்னையைப் போல்
அரவணைத்து அன்புகாட்டி ஆதரித்தீர்
அழகுடனே நாம் திகழ வேண்டும் என்று
அனுதினமும் பாடுபட்டு உழைத்து வந்து, ஆங்காங்கே
ஆடைகளும் ஆபரணமும் அர்த்தமுடன் வாங்கிவந்து
அலங்கரித்தீர்

திறமையுடன் நாம் திகழவேண்டும்என்று
தினம் தினமும் புத்திமதி உபதேசங்கள்
தீராத கவலை எமைத் தீண்டிடாது கீதையின் பலவரிகள்
மட்டுமன்றி பழமொழிகள் பலகூறி, அனுசரனை பல புரிந்து
- ஆதரித்தீர்

குவலயத்தில் கொடுக்கின்ற கொள்கை கண்டீர்
கொஞ்சியும் குலாவியும் வளர்த்து விட்டீர்
அவனிதனில் உமை இனி எங்கு காண்போம்
ஐயாவே ஐயாவே அணைக்க வாரீர்.



## என் அருமை ஐயா

2. 3. 2002 எனது மகள் சக்திக்கு முடி இறக்கும் நல்ல நோக்கத் துடன் நயினை செல்லப் போகிறேன் நாளை, என விடைபெற வந்தபோது எனது கரத்தை இறுகப் பற்றி விரைந்து திரும்பிவா தம்பி என்றுகூறிச் சிறிய வேதனையைக் கூட வெளியில் காட்டாது புன் முறுவலுடன் என்னை அனுப்பி வைத்துவிட்டுச் சதா கவலைப்படுவீர்கள் என்று நான் எண்ணவில்லை. எனது பிரிவால் ஏற்பட்ட இந்தக்கவலை உங்கள் இதயத்தை இப்படித்தாக்கும் என நான் கனவிலும் நினைக்கவில்லை. 08. 03. 2002 கொழும்பில் இருந்து உங்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கூறியபோது என்பிரிவு உங்களை வாட்டியது தெரியவில்லை, தெரிந்திருந்தால் யாழ் செல்லாது கொழும்பிலிருந்து லண்டன் திரும்பி இருப்பேன். முற்றுந் துறந்த முனிவர்களாயினும் பாசத்திற்கு அடிமையாகி விடுவார்கள் என்று காட்டிவிட்டீர்கள். சாதாரண எழுதுவினைஞரின் ஊதியம் போதாது என்று இன்னும் இருதொழில்கள் செய்து St. Thomas Private School, இல் என்னைப் படிக்க வைத்து சிறுவயதிலேயே ஆங்கிலப் பத்திரிகைகள் வாங்கி வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி விசேட ஆசிரியர்களை வீட்டுக்குக் கூப்பிட்டு படிப்பித்து வெள்ளைக்காரன் போல வெளிக்கிடு தம்பி என்று மிக மிக அளவான உடுப்புத் தைப்பித்து அணிவித்து அழகு பார்த்து ஆங்கில உணவகங்களுக்கு கூட்டிச் சென்று முள்ளுக்கரண்டியால் சாப்பிடப் பயிற்றுவித்த காரணத்தினால் எனக்கு இளவயதிலேயே ஆங்கில மோகத்தில் ஆசைவந்து என்னை எப்படியாவது இங்கிலாந்து அனுப்பி வையுங்கள் என்று கேட்டதும் முக மலர்வுடன் உங்கள் இயலாமையை வெளிப்படுத்தாது 1974 ஆம் ஆண்டு என்னை Germany இற்கு அனுப்பி வைத்ததை எப்படி மறப்பேன். நான் கனடாவில் இருக்கும்போது மாமிச போசணியாக இருப்பதை விட்டு

மரக்கறிச் சாப்பாடு சாப்பிடு, பகவத்கீதை படி எனப் பல உபதேசங்கள் எழுதி என்னைப் பதப்படுத்தினீர்கள். நயினாதீவு அமுதசுரபிக்குப் பணம் என்னிடம் தந்துவிட்டு ரசீது பெற்றுவரும்படி கூறியதுடன் அப்பணியை என்னைத் தொடரச் சொன்னீர்கள். கதிரித்தம்பி புன்னர் வேலாயுதர், சின்னக்குட்டி பரம்பரை பரம்பரையாகச் செய்த நயினாதீவு 8ம் திருவிழாவை நாமும் பரம்பரை தவறாது செய்ய வேண்டும் என ஆசைப்பட்டீர்கள் அன்னை நாகேஸ்வரி உங்கள் ஆசையை நிறைவேற்றுவாளாக! அன்னையின் திருநீற்றைக் கொண்டு Lewisham Hospital இற்கு ஓடிவந்து ஐயா வந்து விட்டேன் இனி ஒன்றும் யோசியாதை யுங்கோ என்றேன். முகத்தில் மிகுந்த தெளிவுடன் காணப்பட்டீர்கள். அடுத்தநாள் எம்மை ஆழாத்துயரில் ஆழ்த்துவீர்கள் என்று யான் எண்ணவில்லை. எனினும் நயினை அன்னையின் திருநீற்றை முதல் நாள் மூன்று முறை நாம் அணிந்து விட்டது அன்னையின் பரிபூரண அருள் உங்களுக்குக் கிடைத்துள்ளது என மனம் தேறுகிறோம்.

மகன்

உதயகுமார்



## ஐயாவுக்கு ஐயாவான மாமா!

எனது ஐயாவின் பிரிவுக்குப்பின் ஐயாவை உங்களில் கண்டேன். ஆழ்ந்த புத்தி அவையடக்கம் முகஸ்துதி விருந்தோம்பல் இவைகட்கு இலக்கணமாய் வாழ்ந்தீர்கள். நயினை அம்மனில் எனக்கிருந்த ஈடுபாடு நயினையைச் சேர்ந்த உங்கள் மகனைக் கரம் பிடிக்க வைத்தது அதே அம்மனில் நீங்கள் அதிக ஈடுபாடு கொண்டிருந்தமையால் ஒரு அபிராமிப் பட்டரைப் போல உங்களை மதிக்க வைத்தது. அதன் காரணமாக நயினை அம்மனின் பெயர் சூட்ட எண்ணி எனது மகளுக்குச் சக்தி என்று நாமம் சூட்டினோம். நயினை அம்மனுக்கு அளப்பரிய சேவை செய்யத் துடித்த நீங்கள் சக்தியைப் பார்க்க எனது நண்பி வதனா வந்திருந்தபோது வதனா நயினாதீவுக்கு எப்படி காசு அனுப்பலாம் என்று வினாவியபோது எனது நண்பி தனது அக்காவின் கணவர் திரு சச்சிதானந்தம் மூலம் அனுப்பினால் திருநீறும் அனுப்பிவைப்பார்கள் என்றார்.

யான் திருநீறு அணிவதில்லை விஷ்ணுவை வணங்குவதால் நாமம் என்றீர்கள் அதற்கு எனது நண்பி அப்படியானால் ஐயா திருநீற்றை நாமமாகக் குழைத்து வைக்கிறது என இருவிரலால் சைகை காட்டிச் சிரித்ததைக் கண்டு நீங்களும் சிரித்துவிட்டு வதனா தாய் நாகரத்தினம் ரீச்சர் மாதிரியே கதைக்கிறாள் கவலைகள் பறந்து போகும் என்று கூறியது நேற்று நடந்தது போல உள்ளது. பழமொழிகள் திருமுறைகள் சோதிடத்தில் சந்தேகம் ஏற்பட்டால் இனியான் யாரைக் கேட்பேனோ? நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாக இருப்பதற்கு உங்களை விட்டால் யாருளர்.

மருமகள்
***அரியமலர்***

## ஐயா முன்னறி தெய்வம்

ஐயா,

தந்தையைப் போல் ஒரு தெய்வம் உலகில் உண்டோ என்பதற்கு அமைய உங்கள் மறைவை ஒரு நாளும் ஈடு செய்ய முடியாது ஐயா, தாய்கு தாயாக தந்தைக்கு தந்தையாக எங்கள் எல்லோரையும் கண்ணும் கருத்துமாக பேணி வளர்த்தீர்கள். உங்கள் அயரா உழைப்பும் திறமையும், என்றும் மறக்க முடியாது. சுவர் இருந்தால் சித்திரம் வரையலாம் என்பது போல் உங்களால் முடியாதது ஒன்றும் இல்லை. சமையற்கலை, தையற்கலை, தோட்டக்கலை, இப்படி பல திறமைகளும் பெற்று இருந்தீர்கள். சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றபடி உங்கள் பழமொழிகளால் எங்கள் எல்லோரையும் வியக்க வைப்பீர்கள் எனக்கு விதம் விதமாக சட்டைகள் தைத்து போட்டு அழகு பார்த்த நாட்களை என்னால் இன்னும் மறக்க முடியாது. எங்கள் எல்லோருடைய பிறந்த தினங்களை வருடம் தவறாது சுகமில்லாத போதும் கூட நீங்களே கைபட எழுதி அனுப்பிய வாழ்த்துக்களை இனி எப்போ காண்பேனோ உங்களை என்றுமே எங்களால் மறக்க முடியாது ஐயா. இன்னும் ஒரு பிறவி இருந்தால் எங்களிடமே வாருங்கள் ஐயா. எங்கள் ஐயா ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

அன்பு மகள்
கலா

## தமிழினும் இனிய ஐயா

அன்புள்ள ஐயா,

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம் என்ற பாரதியாரின் பாடலை உண்மையாக்கும் நோக்குடன் எனக்கு செந்தமிழ்ச் செல்வி என நாமம் சூட்டி மகிழ்ந்தது மல்லாமல் சிறுமியாக இருந்த காலந்தொட்டு இன்றுவரை ஒவ்வொரு அமைப்புப் பொருந்திய காதணிகள் வாங்கி அணிவித்து அழகுபார்த்தீர்கள் குழந்தைப்பருவத்தில் குளிக்க வாத்து தலை உலர வைத்து எனது அன்னைக்கு அனுசரணையாக உதவினீர்கள். இன்றும் Catford இல் நீராடினால் பிள்ளை தலையைத்துடை என்று கூறுவது எனது காதுகளில் ஒலிக்கிறது. நானும் எனது கணவர் பிள்ளைகளும் பிரான்ஸ் இலிருந்து வந்தால் இரவு இரண்டு மணியானாலும் எழும்பி இன்முகம் கொண்டு வரவேற்பதை யாம் மறக்க முடியுமா? உங்கள் ஸ்தாபனத்தில் இருந்து யார் எம்மை வரவேற்பார் என ஏங்குகிறோம் ஐயா!

மகள் செந்தமிழ்ச் செல்வி
மருமகன் முத்துலிங்கம்
பேரப்பிள்ளைகள் அமிர்த வர்ஷினி
பிலோஜினி
பிரசன்னா



## அறிவின் பொக்கிசமான ஐயா

அன்பிற்கு அன்பாய் அறிவுக்கு அறிவாய்
கண்ணுக்குக் கண்ணாய் எங்களை வளர்த்து
ஆளாக்கி எங்களுடன் லண்டனில் 18 ஆண்டுகள் வாழ்ந்த ஐயா
இன்று எங்கு சென்றீரோ!

யான் கணவருடன் வாழ்ந்த காலத்தை விட கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்ற மூன்றையும் இலட்சியமாகக் கொண்ட தங்களுடன் சீவித்த காலத்தை எண்ணிப் பேருவகை கொள்வதுடன் கூடியகாலம் கடைசிப்பிள்ளையாக தங்கள் நிழலில் வாழக்கிடைத்தது யான் செய்த தவப்பயனே ஆகும். எனது அன்னை France சென்று திரும்பிவரமுடியாது தவித்து நின்ற வேளையிலும் எனது திருமணத்தை அன்னை தந்தை ஸ்தானத்தில் இருந்து லண்டனில் நடாத்தி வைத்தீர்கள். எனது மூன்று பிள்ளைகளிலும் மிகுந்த பாசம் கொண்டிருந்தபோதும் ஆதவன் ஆதவன் என மூத்தமகனை அன்பு கொண்டழைப்பது இன்னும் எனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. உடல் நிலை மோசமாக இருந்தபோதிலும் உவகை பொங்க எனது மகள் சுபிதாவின் பூப்புனித நீராட்டு விழாவுக்குவந்தமை எனக்கு ஒரு சந்தோச அதிர்ச்சியை ஏற்படுத்தியது எனது கணவனை மருமகன் போல எண்ணாது மகனாக எண்ணி வாய் நிறைய ராஜ், ராஜ் என்று அழைத்து அன்பு காட்டினீர்கள். உங்கள் இழப்பு நமது குடும்பத்திற்கு ஒரு பேரிழப்பாகும் மீண்டும் ஒரு முறை பிறக்க நேர்ந்தால் எங்களிடமே வாருங்கள் ஐயா!

உங்கள் பிரிவால் வாடும்
***மகள் இளவரசி***
***மருமகன் ராஜ்குமார்***
***பேரப்பிள்ளைகள் ஆதவன்,சுபிதா, ரஜிதா***

# IN LOVING MEMORY OF MY BELOVED GRANDFATHER (AYAH)

It is very difficult for me to accept and come to terms with the fact that my ayah has departed from this world and is no longer there for me in body. However, I consider myself knowing that ayah will always be watching over me and I will always feel his presence around me in spirit. This was proven to me and the rest of my family before our very eyes on the eighth day after he departed. I wanted to share this experience with all of you and would like to enlighten you on what took place that night. Our family members who were present in the house at the time were all gathered in my bedroom which overlooked my parked jeep. All of a sudden for no apparent reason my uncle noticed that all of the lights on the vehicle started flashing and then stopped after about a minute or two. We put it down to coincidence however this repeated several times throughout the nights consecutively after I drove the jeep only this stopped and never occurred again to this day. many of you maybe sceptical, I too would have been if I had not seen this for myself.

This experience has strengthen my believes and i rest assured knowing that ayah will always with me. Those who know me will also know, that ayah replaced the world in my life since my father's death. When I was five years old since then ayah has fulfiled the dual role of a loving, caring father beloved grandfather. I have never felt a lost like I do now. Ayah was always there for me at every waking moment to share in my grief and my success and to achieve me. I can honestly say that rarely did he ever loose his temper or shout at me or anyone else for that matter. He was very patience, tolerant and a man dignity and pride although ayah's death was sudden and un anticipated, it gives me comfort to know that he died peacefully, that he was mentally alert and very much himself till his last breath.

He did not wither or endure any sufferance but died talking and eating as per usual and all his senses intact, thats a blessing not all of us will be priviledged to. Strong spiritual believes in God brought him a painless end, ayah would always either be reading the Bhagavad Gita or the Kandasasgti Kavasam and would often encourage me to read Gita and I would tell him later ayah. There are so many things that I 'd liked to have shared with ayah and ask his guidance for, since March 29th I cannot pick up the phone and talk to him any longer. I will ayah more than anyone could ever know and we will always be in my thoughts. Hope he will be there in spirit on my wedding.

Your ever loving granddaughter
***Velvillie & Grandson Kumanan***

# தந்தை அனைய நண்பர்
## திரு சண்முகராஜா ஐயா அவர்கள்

எனது தந்தைக்குச் சரிநிகராக அன்பையும் பாசத்தையும் பொழிந்து நட்புரிமை பாராட்டிப் பழகிய எம் மதிப்புக்குரிய திரு சண்முகராஜா அவர்களைப்பற்றி எழுதுவதற்கு எவ்வளவோ இருந்த போதிலும் தற்போதைய நிலையில் சுருக்கமாக சிலவற்றைக் கூறலாமென நினைக்கின்றேன்.

ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் வரையிலான தொடர்பும் நட்புறவும் கொண்டிருந்த சண்முகராஜா அவர்களை முதன் முதலாக நான் தொழில்வாய்ப்புப் பெற்றபோது எனது அலுவல கத்தில் மூத்த அலுவலராகச் சந்திக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அக்கால முதல் அவரோடும் அவர் குடும்பத்தினரோடும் நெருங்கி உறவாடும் பழக்கத்தால் அவரது பிள்ளைகள் அவரை அழைப்பது போலவே "ஐயா" என்றே அழைக்கும் உரிமைப் பேற்றை யான் பெற்றேன். அவ்வளவுக்கு அவர் என்னிடம் ஒரு தந்தைக்குரிய அன்பும் அக்கறையும் கொண்டிருந்தது மட்டுமன்றி என் எதிர்கால வாழ்விலும் பல சந்தர்ப்பங்களில் ஒரு நல்ல வழிகாட்டியாயும் இருந்தார்.

எனது குடும்பத்துடன் நான் இலண்டனுக்கு வந்துவிட்டதை எவ்வாறோ அறிந்ததும் "மகன்" என்று கூறி அரவணைத்ததை என்றும் என்னால் மறக்க முடியாது. ஐயா! என்னில் மட்டுமன்றி எனது மனைவி மக்கள் அனைவரிடமும் பேரன்பு கொண்டிருந்தார். ஐயா அவர்களின் மறைவு எமக்கெல்லாம் ஈடு செய்ய முடியாத பேரிழப்பு. அவர்களின் ஆன்ம சாந்திக்காக இறைவனிடம் வேண்டி எங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.


என்றும் மறவாத

*V.I. சிவகுணம்*

*Financial Manager*

*Tamil Community Housing Association.*

# வம்சாவழி


புன்னர் வம்சம்
சின்னக்குட்டி + சிவபாக்கியம்
நாகரத்தினம்
சண்முகராசா
+
சிவபாக்கியம்
இரத்தினசபாவதி
நடராசா
உதயகுமார்
+
அரியமலர்
சக்தி
தெய்வகலா
+
இமானுவல்
வேல்விழி
+
குமணன்
தெய்வகலா
+
மாணிக்கவாசகர்
ரேவதி
வனிதா
உஷா
செந்தமிழ்ச் செல்வி
+
முத்துலிங்கம்
அமிர்த வர்ஷினி
பிலோஜினி
பிரசன்னா
இளவரசி
+
ராஜ்குமார்
ஆதவன்
சுபிதா
ரஜிதா

# நன்றி நவிலல்

அமரர் திரு சின்னக்குட்டி சண்முகராஜா அவர்களின் மரணச் சடங்கு, சபிண்டிக் கிரியை, அந்தியேட்டிக் கிரிகைகளிற் கலந்து கொண்டவர்களுக்கும் மலர் வளையங்கள், அனுதாபச் செய்திகள் வழங்கியோரிற்கும் வேறுபல வழிகளிலும் பேருதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோரிற்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

பிள்ளைகள்

The members of the family of late Mr. Cinnakuddy Channugarajah wish to express their deep appreciation and gratefulness to those who attended the funeral sent wreaths and messages of condolences. They also thank all relations and friends who assisted them in numerous ways.

Son, Daughters
Daughter in law
Son in laws
and
Grand Children

Printed by Sami Graphics Tel: 020 8795 1772